பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 04 2024 **SUNDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்தியில் நிலையான வலுவான அரசு அமைந்தால் தான் உலக அளவில் ஏற்படும் நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. விலைவாசி உயர்வு, பணவீக்கம் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண பிஜேபி தவறிவிட்டதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி வதேரா குற்றம் சாட்டியுள்ளார்.

3. வளைகுடா நாடுகள் மண்டலத்தில் பதற்றத்தை தணிப்பதற்கு அப்பகுதியில் உள்ள நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று வளைகுடா ஒத்துழைப்பு குழுமம் வலியுறுத்தியுள்ளது.

4. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கரின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி லக்னோவை 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

>>>>><<<<<

தற்போதுள்ள இக்கட்டான உலக சூழலில் மத்தியில் வலுவான நிலையான அரசு அமைய வேண்டியது அவசியம் என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்கான பிஜேபியின் தேர்தல் அறிக்கையை இன்று புதுதில்லியில் வெளியிட்டுப் பேசிய அவர், உலக நாடுகளுக்கு இடையே இறுக்கமான சூழ்நிலை நிலவி வருவதையும் சுட்டிக்காட்டினார்.

இதுபோன்ற இடர்பாட்டு காலங்களில் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது மத்திய அரசின் தலையாய கடமையாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த தேர்தலில் அறுதி பெரும்பான்மையுடன் நிலையான அரசு அமைந்தால் தான் உடனுக்குடன் உறுதியான முடிவுகளை மேற்கொண்டு சிறப்பாக செயலாற்ற முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீது நேற்று ஈரான் தாக்குதலை தொடங்கியுள்ள நிலையில், பிரதமர் குறிப்பிட்டுள்ள இந்த தகவல் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

>>>>><<<<<

விலைவாசி உயர்வு, பணவீக்கம் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண, பிஜேபி எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி வதேரா தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், ஜெலூர் என்ற இடத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்கள் பிரச்சினைகளிலிருந்து எப்போதும் விலகியே இருப்பதாகவும் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதில் மட்டுமே கவனம் செலுத்தி வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

ஊழலுக்கு எதிராக பிஜேபி போராடுவதாக கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறிய திருமதி. பிரியங்கா காந்தி, எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்காக மட்டும் ஊழல் குற்றச்சாட்டுகளை அக்கட்சி கூறி வருவதாகவும் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஈரான் – இஸ்ரேல் இடையேயான மோதல் குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இருநாடுகளுக்கு இடையேயான மோதல் காரணமாக எழுந்துள்ள சூழலை, இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாக வெளியுறவு துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பதற்றத்தை தணிப்பதற்கான நடவடிக்கைகளை இருநாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

இதனிடையே, இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய தாக்குதலை அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் வன்மையாக கண்டிப்பதாக கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், தற்போது நிலவும் சூழ்நிலையை அமெரிக்கா உன்னிப்பாக கவனித்து வருகிறது என்றும் தெரிவித்தார்.

ஐநா பாதுகாப்பு குழுவும் இந்த மோதல் குறித்து கவலை தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

வளைகுடா நாடுகள் மண்டலத்தில் மேலும் பதற்றம் எழாமல் தடுப்பதற்கு அப்பகுதியில் உள்ள நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று வளைகுடா ஒத்துழைப்பு குழுமத்தின் பொதுச்செயலாளர் திரு. ஜஸீம் முகமது வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்ச்சையை சந்தித்து வரும் நாடுகள் சுயகட்டுப்பாட்டுடன் செயல்படுவதற்கான வழிவகைகளை காண வேண்டும் என்று கூறியுள்ளார்.

பதற்றம் அதிகரித்து, நிலைமை மோசமானால் வளைகுடா மண்டலப் பகுதியில் உள்ள மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தூதரக ரீதியில் அமைதியாக பேச்சுவார்த்தை மூலம் பதற்றத்தை தணிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

உலக நாடுகளும் இந்த விஷயத்தில் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும், வளைகுடா ஒத்துழைப்பு குழுமத்தின் பொதுச்செயலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

பத்து ஆண்டுகளாக மத்தியில் ஆட்சி செய்த பிஜேபி, ஏற்கனவே மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என ஆம் ஆத்மி குற்றம் சாட்டியுள்ளது.

தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவரும், தில்லி அமைச்சருமான திருமதி. **Atishi,** ஒவ்வோராண்டும் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக அக்கட்சி உறுதியளித்தது என்றும், ஆனால் தற்போது நாடுமுழுவதும் வேலையில்லா பிரச்சினை அதிகரித்துவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்திற்காக நாடுமுழுவதும் செலவிடப்படும் தொகை, தில்லி அரசின் சுகாதார துறைக்கான நிதி ஒதுக்கீட்டை விட குறைவாக உள்ளது என்று திருமதி. **Atishi** கூறினார்.

**>>>>><<<<<**

மக்களவைக்கு முதல்கட்டமாக வரும் 19ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் வாக்குப்பதிவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாக்குச்சாவடி சீட்டுகள் விநியோகம் செய்யும் பணி நிறைவடைந்துள்ளது.

வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு தேவையான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு ஏற்பாடுகளும், வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனை மாவட்ட தேர்தல் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இதுவரை உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 324 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதில் 151 கோடி ரூபாய் ரொக்கமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**>>>>><<<<<**

பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கரின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் தலைவர்கள் பலர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சென்னையில் உள்ள அம்பேத்கர் மணி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அஇஅதிமுக சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி, சேலம் மாவட்ட மைய நூலகம் அருகேயுள்ள அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

>>>>><<<<<

நேபாள நாட்டில் உள்ள பல்வேறு தன்னார்வ அமைப்புகளுக்கு 35 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் 66 பள்ளி பேருந்துகளை இந்தியா பரிசாக வழங்கியுள்ளது.

அந்நாட்டில் சுகாதாரம் மற்றும் கல்வி மேம்பாட்டிற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நல்லெண்ண நடவடிக்கையாக அங்குள்ள இந்திய துணைத் தூதர் திரு. நவீன் ஸ்ரீவத்ஸவா வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது, நேபாளத்தின் நிதியமைச்சர் திரு. பர்ஸாமன் உடனிருந்தார்.

>>>>><<<<<

பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமும், ராணுவமும் இணைந்து இந்த சோதனையை, ராஜஸ்தான் மாநிலம், போக்ரானில் நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த சோதனையின் போது ஏவுகணைகளின் செயல்பாடுகள் அனைத்தும் திட்டமிட்டபடி துல்லியமாக இருந்ததாக, பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் கூறியுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் 61 நாள் மீன்பிடி தடைக்காலம் இன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வருகிறது. இந்த தடைக்காலத்தில் படகுகளை பழுதுபார்த்தல், வலைகளை சரிசெய்தல் போன்ற பணிகளை மீனவர்கள் மேற்கொள்வார்கள் என்று எமது தூத்துக்குடி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி லக்னோவை 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதலில் களமிறங்கிய லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 161 ரன் எடுத்தது. 162 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய கொல்கத்தா அணி 15 புள்ளி நான்கு ஓவரிலேயே வெற்றி இலக்கை எட்டியது. மும்பையில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ள சென்னைக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

>>>>><<<<<

**Candidates** செஸ் போட்டியின் 9வது சுற்று முடிவில் இந்தியாவின் **Gukesh** முதலிடத்தில் உள்ளார். கனடாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் கூடுதல் புள்ளிகளுடன் அவர் முதலிடத்தில் நீடிக்கிறார்.

>>>>><<<<<

**Morelos Open Tennis** போட்டியில் இந்தியாவின் **Arjun Kadhe – Jeevan Nedunchezhiyan** இணை பட்டம் வென்றது.

பிரேஸிலில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடும் தகுதிச் சுற்று போட்டியில் இந்தியாவின் **Palak Gulia** மற்றும் **Saniyam** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>END<<<<<